# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 60/2023 நாள்.11.9.2025

DW3- திரு.முருகானந்தம் , த /பெ. திரு. கோவிந்தராஜ்

5ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

பிரதிவாதி நெடுமாறன், ரிஸ்வான், ஐயப்பன் கோவிந்தசாமி ஆகியோர்களை தெரியுமா என்றால் கோவிந்தசாமியைதான் தெரியும். கடந்த 35 வருடமாக நான் பல்வேறு நீதிமன்றங்களில் வழக்கு தாக்கல்செய்தும் நடத்தியும் உள்ளேன் என்றால் தர்கார் கேஸ் ஒரு கேஸ் நான்கு வருடங்கள் நடந்தது. அந்த வழக்கு எந்த வருடம் போடப்பட்டது என்றால் ஞாபகமில்லை. இந்த வழக்கு விபரங்கள் ஞாபகம் உள்ளதா என்றால் ஞாபகம் உள்ளது. புதிய பேருந்துநிலையம் அருகில் என் நண்பர் லூர்துராஜ் உள்ளார் என்றால் எனக்கும் அவருக்கும் சம்மந்தமில்லை. அவருக்கு நான் அதிகாரம் பெற்ற முகவர் என்றால் இல்லை. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 9வது வகுப்பு தேர்ச்சி பெறவில்லை. எனக்கு சொந்த ஊர் எது என்றால் திருவாரூர் மாவட்டம் கொடராச்சேரி அருகில் உள்ள அத்திசோழமங்களம். நான் தஞ்சாவூர் எத்தனை வருடங்கள் இருக்கிறேன் என்றால் 26. நான் அரசு வேலையில் இல்லை என்றால் ஆமாம் அரசு ஒப்பந்த வேலை எடுத்து செய்துவருகிறேன். ஒப்பந்தம் போடுவது எப்படி, அதன் நடைமுறைகள் எனக்கு தெரியும் என்றால் ஆமாம். அதைபோல் பொது அதிகாரம் பற்றியும் எனக்கு தெரியும் என்றால் தெரியாது. வாதி தண்டபாணி என் பெயரில் நெடுமாறன் ரிஸ்வான், ஐயப்பன்ஆகியோர் பெயரில் பொது அதிகாரம் கொடுத்தார் என்றால் ஆமாம் அதுதான் வா.சா.ஆ.2 ஆக குறியாகியுள்ளது என்றால் ஆமாம். வா.சா.ஆ.2 இல் நான் 2வது நபராக கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் ஆமாம். தாவா சொத்து வா.சா.ஆ.1 கிரய பத்திரத்தை நானும், நெடுமாறன், ரிஸ்வான், ஐயப்பன் ஆகியோர் 5ஆம் பிரதிவாதிக்கு கிரயம் செய்து கொடுத்தோம் என்றால் ஆமாம். அதில் 2வதாக உள்ள கையெழுத்து என்னுடையது என்றால் ஆமாம். வா.சா.ஆ.1 மூலம் சொத்தை விற்பதற்கு முன்பாக 5ஆம் பிரதிவாதியிடம் விற்பனை செய்ய ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டோம் என்றால் அக்ரிமெண்ட் போட்டது எதுவும் எனக்கு தெரியாது. 5ஆம் பிரதிவாதி கிரயம் செய்து கொடுத்த தேதியில் நானும், நெடுமாறன், ரிஸ்வான்,

ஐயப்பன் தலா ரூ5, 38, 250 வங்கி காசோலை பெற்று கொண்டோம் என்றால் டிடியாக கொடுத்தார் பணமாக மாற்றி அவரிடமே கொண்டுபோய் கொடுத்துவிட்டேன். பணத்தை திருப்பி 5ஆம் பிரதிவாதி கொடுத்து ரசீது வாங்கி கொண்டேனா என்றால் இல்லை. வாதி தண்டபாணி என் பெயர், வாதி வா.சா. ஆ 1 விற்பனைக்கு பிறகு 1 முதல் 5 பிரதிவாதிகள் பெயரில் விற்பனை பணத்தை அவருக்கு கொடுக்கவில்லை என்று புகார் கொடுத்தார் என்றால் தெரியாது. அப்படி புகார் கொடுத்தபிறகு வாதி என் பெயர் மற்றும் 1 முதல் 5 பிரதிவாதிகள் பெயரிலும் நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றத்தில் ஒரு தனிபுகார் சிசி எண் 320/2022 ஆக வழக்கு கொடுத்துள்ளார் என்றால் அதுபற்றி தெரியாது. இந்த வழக்கில் இடையில் இடையில் ஆஜராகியுள்ளேன் என்றால் என்னை அழைக்கும்போது ஆஜராகியுள்ளேன். அதில் நான் 4வது குற்றவாளி என்றால் அது எனக்கு தெரியாது. அந்த வழக்கில் குற்றவாளியாக இருக்கும் நானே வாதி தண்டபாணிக்கு ஆதரவாக சாட்சி சொன்னேன் என்றால் சொல்லவில்லை. நீதித்துறை நடுவர் எண் 2இல் நேரடியாக ஆஜராகி வாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் இல்லை. வாதி காவல்துறையில் புகார் கொடுத்தார் என்றும் அதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்ற காரணத்தினால் தண்டபாணி தனிபுகார் கொடுத்துள்ளார் என்று சாட்சியம் சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. அவ்வாறு சாட்சியம் சொல்லும்போது 50 சதவீதம் பணம் கொடுத்துதான் பொது அதிகாரம் வாங்கினார்கள் என்று சாட்சியத்தில் சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. நான் தற்சமயம் கோவிந்தசாமிக்கும் எனக்கும் ஏற்பட்ட பிரச்சனையின் காரணமாகதான் நான் குற்றவியல் நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்லிவிட்டு தற்போது சொல்லவில்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் 1 முதல் 4 பிரதிவாதிகள் தண்டபாணியிடம் ரூ 40 லட்சம் விலைபேசி பணம் கொடுத்து கிரய பத்திரத்திற்கு பதிலாக பவர் பத்திரம் வாங்கினோம் என்றால் இல்லை. எனக்கும் 1, 3, 4 பிரதிவாதிகளுக்கும் பணம் பிரித்து கொள்வதில் ஏற்பட்ட பிரச்சனையின் காரணமாக பவர் வாங்கவில்லை என்றும், பணம் பெறவில்லை என்றும் வாதிக்கு கிரய பணம் கொடுக்கவில்லை என்றும் சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. நான் கிரய பத்திரத்தை 5ஆம் பிரதிவாதிகள் செய்து கொடுப்பதற்கு முன்பாக வாதியிடமிருந்து பவர் வாங்கும்போது அசல் பத்திரங்களையும் அவரிடமிருந்து வாங்கிகொண்டோம் என்றால் சரியல்ல. நானும், 1 முதல் 4 பிரதிவாதிகள்

எழுதி பெற்ற பவர் பத்திரம் சொத்தின் அசல் ஆவணங்களை 5ஆம் பிரதிவாதியிடம் கொடுத்து கிரயம் செய்து கொடுத்தோம் என்றால் சரியல்ல. அவ்வாறு கிரயம் செய்து கொடுக்கும் போது முன்பணம் 1லட்சம் பெற்றது போக மீதி பணத்தை 1 முதல் 4 பிரதிவாதிகளாகிய நாங்கள் சம தொகையாக காசோலைமூலம் பெற்று கொண்டோம் என்றால் இல்லை. காசோலையை பணமாக்கி அந்த பணத்தை 5ஆம் பிரதிவாதியிடம் கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. 5ஆம் பிரதிவாதி சொத்தை வாங்குவதற்கு முன்பாக என் முன்பாக வாதியிடம் பேசி பவர் பத்திரம் உண்மையா என்று கேட்டு அசல் பத்திரம் பற்றி கேட்டு எங்களிடமிருந்து கிரயம் வாங்கினார் என்றால் சரியல்ல. 5ஆம் பிரதிவாதி சரியான மறு பயனுக்கு கிரயம் வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல. எனக்கும் மற்ற பிரதிவாதிக்கும் ஏற்பட்ட மன கசப்பின் காரணமாக நான் வாதியை துண்டிவிட்டு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை.

1, 3, 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

என் பிரமாண வாக்குமூலத்தில் வா.சா.ஆ.1, வா. சா.ஆ.2 ஆவணத்தை மறுத்துள்ளேனா என்றால் ஆமாம். தற்போது என்னிடம் காண்பிக்கபடுவது என்னுடைய பிரமாண வாக்குமூலமா என்றால் ஆமாம். இந்த பிரமாண வாக்குமூலத்தில் கிரய பத்திரத்தையும் பவர் பத்திரத்தையும் போர்ஜரி என்று சொல்லியுள்ளேனா என்றால் இல்லை கிரய பத்திரத்தில் கோவிந்தசாமி கூப்பிட்டதால் கையெழுத்து போட்டேன். அவ்வாறு கோவிந்தசாமி கூப்பிட்டு கையெழுத்து போட்டேன் என்று பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. என் பிரமாண வாக்குமூலத்தில் வழக்கானது காலாவதி தோசத்தார் பாதிக்கபட்டுள்ளது என்று சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று கோரியுள்ளேன் என்றால் ஆமாம். வாதி கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பு வாங்கி கொண்டேன் என்றால் ஆமாம். அதற்கு பதில் அறிவிப்பு கொடுத்தேனா என்றால் ஞாபகமில்லை. நான் வாதியுடன் சேர்ந்து கொண்டு வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**(ஒம்/- ப .நாகராஜன்)**
**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தஞ்சாவூர்.**